**செய்தி வெளியீடு எண்:147** **நாள்:22.02.2021**

**<u>இன்று (22.2.2021), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், டாக்டர் ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை துவக்கி வைத்து, கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், மரக்காணம் அழகன்குப்பம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை:</u>**

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், மரக்காணம் அழகன்குப்பம் மீன்பிடித் துறைமுகம் என இரண்டு திட்டத்திற்கும் அடிக்கல் நாட்டு விழா மற்றும் விழுப்புரம் நகராட்சியில் சீரமைக்கப்பட்ட அம்மா பூந்தோட்டக் குளம் மற்றும் பூங்கா திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உங்கள் மாவட்டத்தின் அமைச்சர் திரு. சி.வி.சண்முகம் அவர்கள் தெளிவாக, விளக்கமாக திறக்கப்பட்ட திட்டங்களையும் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களையும் பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். காலையிலிருந்து மாலை வரை தொடர்ந்து நிகழ்ச்சிகள் இருந்த காரணத்தினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் நீங்கள் பல ஆண்டுகாலமாக வைத்த கோரிக்கையை இன்றைக்கு நிறைவேற்றுகிற அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழகத்திலேயே முதன் முதலில் கிராமப்புற மக்களுக்கு கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தின் மூலமாக குடிநீர் வழங்குகின்ற ஒரே அரசாங்கம் மாண்புமிகு அம்மாவின் அரசாங்கம் என்பதை குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் சுட்டிக்காட்டினார். ஆகவே, மாண்புமிகு அம்மாவின் அரசு எங்கெல்லாம் மக்கள் பாதிக்கப்படுகிறார்களோ, எங்கெல்லாம் குடிநீர் பிரச்சனை இருக்கின்றதோ அங்கெல்லாம் தனி கவனம் செலுத்தி, எத்தனை கோடி செலவு என்பதல்ல, கோடியில் இருக்கின்ற

மக்களுக்கும் குடிநீர் கொடுக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு திட்டங்களை நிறைவேற்றி கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 1,550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதனால், விழுப்புரம், திண்டிவனம் நகராட்சிகள், மரக்காணம், விக்கிரவாண்டி பேரூராட்சிகள் மற்றும் மரக்காணம், வானூர், மயிலம், விக்கிரவாண்டி, காணை ஒன்றியத்திலுள்ள 692 ஊரக குடியிருப்புகள் சிப்காட், திண்டிவனம் மற்றும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்று ஏறத்தாழ 10 லட்சம் பேர் குடிநீர் பெறுகின்ற அற்புதமான திட்டம் உங்களுக்கு இன்றைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது சாதாரண விஷயமல்ல, பல ஆண்டுகளாக நீங்கள் காத்திருந்த திட்டம், நீங்கள் எண்ணியிருந்த திட்டம், தங்களுக்கு குடிநீர் வருமா ? வராதா ? என்று ஏங்கிக் இருந்த அந்த ஏக்கத்தைப் போக்கிய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

அதேபோல குடிமராமத்து எனும் அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் ஏரிகள், குளங்கள், குட்டைகள் அனைத்தையும் விவசாயிகளின் பங்களிப்போடு தூர்வாரப்பட்டு பொழிகின்ற மழை நீர் முழுவதும் தேக்கி வைத்து வேளாண் பெருமக்கள் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கிக் கொடுத்துள்ளோம். அந்த வகையில் வீடூர் அணை முழு கொள்ளளவை மீட்டெடுக்கும் பொருட்டு ஏறத்தாழ 109 கனஅடி நீர் தேக்கி வைப்பதற்காக ஏறத்தாழ 43 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த மாவட்ட மக்கள் என்ன எண்ணுகிறார்களோ, இந்த மக்களுக்கு எந்தத் திட்டத்தின் வாயிலாக நன்மை கிடைக்கின்றதோ, அந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல, மீனவ மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவதைத் தவிர்க்க மரக்காணம் வட்டம், அழகன் குப்பத்தில் புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைத்த அந்த கோரிக்கையை ஏற்று இன்றைய தினம் 235 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் வேண்டுமென்றே திட்டமிட்டு அம்மா அரசு மீது தொடர்ந்து குறை சொல்லி வருகிறார். அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன செய்தது என்று கேட்கிறார். அம்மாவின் அரசு என்னென்ன செய்திருக்கிறது என்று புள்ளி விவரத்தோடு இந்த மண்ணின் மைந்தர், உங்கள் மாவட்ட அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இங்கே தெரிவித்தார். நாங்கள் எதைச் செய்வோம் என்று நினைக்கிறோமோ அதைச் சொல்வோம், சொன்னதை செய்கின்றோம், அதுதான் எங்கள் அரசின் நோக்கம், இலட்சியம், அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதேபோல, குடிமராமத்து திட்டத்தின் மூலம் 38 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

நான் ஓராண்டுக்கு முன்பு இந்த பகுதிக்கு வந்தபோது குப்பைமேடாக இருந்த இந்தப் பகுதியை, இது நகரத்தின் மையப் பகுதியாக இருப்பதனால், நிதி ஒதுக்கீடு செய்து, இப்பகுதியில் அருமையான பூந்தோட்டம் அமைக்க வேண்டுமென்று அருமைச் சகோதரர் அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, அற்புதமான வடிவமைப்புடன், விளையாட்டரங்கம், விநாயகர் சிலை ஆகியவற்றுடன் கூடிய பூந்தோட்ட குளப் பூங்கா அமைத்துள்ளோம். திரு.ஸ்டாலின் அவர்களே இந்தக் குளத்தை வந்து பார்த்துவிட்டு அண்ணா திமுக அரசைப் பற்றி சொல்லுங்கள். திரு.ஸ்டாலின் அவர்களே, இங்கேயுள்ள மக்கள் சொல்வதைப்போல உங்கள் பிரதிநிதி பொன்முடியை அனுப்பி இந்தக் குளத்தை பார்த்து செல்லச் சொல்லுங்கள். இதற்கு அருமைச் சகோதரர் திரு.சி.வி.சண்முகம் அவர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் பொருந்தும்.

அதுமட்டுமல்ல, ஏழை, எளிய மக்களுக்கு அவர்கள் இருக்கின்ற பகுதியிலேயே மருத்துவ சிகிச்சை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஒரே காலகட்டத்தில் 2000 அம்மா மினி கிளினிக்குகளைக் கொண்டுவந்த அரசு அம்மாவின் அரசு. விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 53 அம்மா மினி கிளினிக்குகளை கொடுத்திருக்கிறோம்.

இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வேளாண் பெருமக்கள் நிவாரணம் வழங்க வேண்டுமென்று வைத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு, விவசாயிகள், கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய கடன் இரத்து செய்யப்படுமென்று அறிவித்து நடைமுறைப்படுத்தியது. இதன் மூலம் 16 இலட்சத்து 43 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில் இருக்கும்

152 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், 65,410 விவசாயிகள் பயிர்க்கடன் வாங்கியிருக்கிறார்கள், 212 விவசாயிகள் நகை பயிர்க்கடன் வாங்கியிருக்கிறார்கள். மொத்தம் 65,622 விவசாயிகள் இந்த மாவட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள். இரத்து செய்யப்பட்ட கடன் தொகை ரூபாய் 451 கோடி ஆகும்.

எனக்கு முன்னால் பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பட்டா இல்லாத மக்களுக்கு ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் வாழும் மக்களுக்கு பட்டா கொடுக்க வேண்டுமென்பதற்காக, 55,000 பேருக்கு பட்டாக்கள் கொடுத்தோம். அதைவிட, இந்த நகரப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு வீடு கட்டுவதற்கு 1 சென்ட் நிலம்தான் கொடுத்தோம். அதை 10 நாட்களுக்கு முன்பு 2 சென்டாக உயர்த்தி உத்தரவை நாங்கள் வழங்கியிருக்கிறோம். கிராமத்திலிருந்து நகரம் வரை நிலமில்லாத ஏழை மக்கள், வீடில்லாதவர்கள், ஒட்டுமொத்தமாக விவசாயத் தொழிலாளி, தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை மக்களுக்கு அரசாங்கமே சொந்தமாக நிலத்தை வாங்கி கான்க்ரீட் வீடு கட்டிக் கொடுக்கப்படும். நகரப்பகுதி மக்களுக்கு அடுக்குமாடி கான்க்ரீட் வீடு கட்டிக் கொடுக்கப்படும். இனி தமிழகத்தில் வீடு இல்லாதோர் இல்லை என்ற நிலையை நாங்கள் உருவாக்கித் தருவோம்.

இந்தப் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதால் இங்கு வாழும் மாணவர்களின் நிலையை கருத்தில் கொண்டு அவர்கள் கல்வியில் உயர வேண்டுமென்பதற்காக இங்கே ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று உங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று பல்கலைக்கழகம் கொண்டு வருவதற்கு எங்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பங்களில் பிறந்த மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்தில் சட்டம் பயில வேண்டுமென்ற கோரிக்கையை பரிசீலித்து ஏறத்தாழ 7 சட்டக் கல்லூரிகளைக் கொண்டு வரலாற்றுச் சாதனை படைத்தது அம்மாவின் அரசாங்கம். ஒரே நேரத்தில் 11 அரசு மருத்துவ கல்லூரிகளைக் கொண்டு வந்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளோம். ஆனால் திரு.ஸ்டாலின் அவர்கள் எந்தத் திட்டமும்

நிறைவேற்றவில்லையென்று பச்சைப் பொய் பேசுகிறார். அவர் வாயைத் திறந்தால் பொய், பொய்யைத் தவிர்த்து உண்மையே கிடையாது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை, எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.

அதேபோல, 27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நந்தன் கால்வாய் திட்டத்திற்கு காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டியது அம்மாவின் அரசுதான். விழுப்புரம், திண்டிவனம் இரண்டு நகராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுகிற அரசாங்கம் அம்மாவின் அரசாங்கம்தான். விழுப்புரம் நகராட்சி 100 ஆண்டுகள் கடந்த பழமையான நகராட்சியாக இருப்பதால் அங்கு பல்வேறு பணிகளை நிறைவேற்ற 50 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திரு.ஸ்டாலின் அவர்களே இந்த ஒரு மாவட்டத்திற்கு மட்டும் இவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்துள்ளோம். பல்வேறு இடங்களில் சாலைகளை சிறப்பாக அமைத்துக் கொடுத்துள்ளோம். ஆரம்பப் பள்ளிகளை திறந்துள்ளோம். ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியதனால் கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. கிராமங்களிலிருந்து நகரம் வரை தமிழகத்தில் அதிகமானோர் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்துள்ளோம்.

அரசு பள்ளிகளில் படிக்கும் 41 விழுக்காடு மாணவர்களில் 6 மாணாக்கர்களுக்கு மட்டுமே கடந்த ஆண்டு நீட் தேர்வின் மூலம் மருத்துவக் கல்வி பயில இடம் கிடைத்தது. நானும் கிராமத்தில் பிறந்து வளர்ந்து அரசுப் பள்ளியில் படித்தவன். எனவே, அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணாக்கர்களின் மருத்துவக் கல்வி பயிலும் கனவு நனவாக வேண்டுமென்று அம்மாவின் அரசு 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு கொண்டு வந்ததன் வாயிலாக, இந்த ஆண்டு 435 மாணாக்கர்கள் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் பயிலும் வாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளோம். அதுமட்டுமல்லாமல், அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று நோயின் காரணமாக வாழ்வாதாரம் இழந்த தொழிலாளர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் விலையில்லா அரிசி, பருப்பு,

எண்ணெய், சர்க்கரை மற்றும் அனைத்து குடும்ப அட்டைக்கும் 1,000 ரூபாய் கொடுத்தோம். இந்த ஆண்டு தைப் பொங்கலுக்கு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் 2,500 ரூபாய் வழங்கினோம். சென்ற தைப் பொங்கலின்போது 1,000 ரூபாய் கொடுத்தோம். கொரோனா காலத்தில் 1,000 ரூபாய் கொடுத்தோம். இவ்வாறு ஒரே ஆண்டில் 4,500 ரூபாய் வழங்கியுள்ளோம்.

ஏழை, எளிய மக்கள் ஏற்றம் பெறவும், கிராமங்கள் வளர்ச்சி அடையவும், பொருளாதாரம் மேம்பாடு அடையவும் எங்கள் அரசு முன்னுரிமை கொடுத்து பல்வேறு சிறப்பான திட்டங்களை நாட்டு மக்களுக்கு நிறைவேற்றி வருகிறது என்று சொல்லி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**